தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 302/பேரூ/2023
நாள். 16.11.2023

திரு. J.முஹம்மத் அலி சித்திக்,
காவேரிப்பாக்கம்,
இராணிப்பேட்டை மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சி ,
இராணிப்பேட்டை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம், கொண்டாபுரம் அமீர் தெரு, எண்.50 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. J.முஹம்மத் அலி சித்திக் என்பவரது 07.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023 அன்று பெறப்பட்டு, 302/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம், கொண்டாபுரம், அமீர் தெரு, எண். 50 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. J.முஹம்மத் அலி சித்திக் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட அமீர் தெருவில் (ஸ்டேட் பேங்க் அருகில்) மழை நீர் தேங்கி பொது மக்கள் சென்றுவர மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதன் காரணமாக பால், கேஸ் சிலிண்டர், காய்கறி போன்ற அத்தியாவசிய பொருட்களை தெருவிற்குள் கொண்டு வர அனைவரும் அச்சப்படுகின்றனர். இதன் மூலம் இங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு பெரும் மன உளைச்சல் ஏற்படுகிறது.

மேற்படி தெருவை கடந்த 14.02.2005 –ல் ஆவணம் எண். 1092/2005–ன் மூலம் காவேரிபாக்கம் பேரூராட்சிக்கு தானம் அளிக்கப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தானம் அளிக்கப்பட்டு சுமார் 18 ஆண்டுகளுக்கும் மேலாக இன்றைய தேதி வரை மேற்படி தெருவில் மட்டும் சாலை அமைக்காமல் உள்ளது.

ஆகவே இதன் மீது விசாரணை செய்து பொதுமக்களின் அடிப்படை தேவைகளுக்கு தடையாகவும், பொது மக்கள் சென்று வர ஆபத்தாகவும் உள்ள தெருவில் விரைந்து சாலை அமைக்க வழிவகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் காவேரிப்பாக்கம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 18.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அமீர் தெரு (ஸ்டேட் பாங்க் அருகில்) சாலை அமைத்திட அரசாணையில் (அரசாணை (4D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09.01.2023ல்) நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சியால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 23.02.2023 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பேரூராட்சி அலுவலக கடித எண். 59/2022 நாள் 10.03.2023 மூலம் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.16.38 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளில் பேரூராட்சி பகுதி முழுவதும் குடிநீர் திட்ட பிரதான பைப்லைன் மற்றும் குடிநீர் விநியோக பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளில் அம்ரூத் 2.0 திட்டப்பணி நடைபெறும் பேரூராட்சிகளில் புதியதாக மேற்கொள்ளப்படும் சாலைகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட பைப்லைன் பணி முடிவுற்றவுடன் சாலைப்பணியினை துவக்கி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அமீர் தெருவில் (ஸ்டேட் பாங்க் அருகில்) தற்போது பைப்லைன் அமைக்கும் பணி முடிவுற்றது. மேலும் தற்போது பேவர் பிளாக் சாலைப்பணியில் ஒரு பக்கத்தில் மழைநீர் வடிகால்வாய் பணி முடிவுற்றும் side wall பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பணியினை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என இதன் மூலம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான காவேரிப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரும் 19.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) 19.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. J.முஹம்மத் அலி சித்திக் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சி அமீர் தெருவில் பேரூராட்சியால் சரியாக பராமரிக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுகிறது. மழைக்காலங்களில் அங்கு மழை நீர் தேங்கிவிடுவதால் அங்கு நடமாடும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்கண்ட தெருவில் அவசர காலத்தில் வாகனங்கள் வருவதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. மேற்கண்ட தெருவை 14.2.2005ல் காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்டும் சுமார் 18 ஆண்டுகள் கழித்தும் இன்னும் மேற்கண்ட தெருவில் சாலை வசதி பேரூராட்சியால் செய்து தரப்படவில்லை. எனவே மக்களின் அடிப்படை வசதியான சாலை வசதியை மேற்கண்ட தெருவில் பேரூராட்சியால் துரிதமாக அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. T. சரவணன் என்பவர் 19.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் பேரூராட்சி பகுதி முழுவதும் குடிநீர் திட்ட பிரதான பைப்லைன் மற்றும் குடிநீர் விநியோக பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள அமீர் தெருவும் இதில் அடங்கும். மேற்கண்ட அமீர் சாலையில் ரூபாய் 4.80 இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை அமைப்பதற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 10.3.2023 அன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட அம்ருத் குடிநீர் திட்டப் பணிகள் முடிவுற்றவுடன் அமீர் சாலையில் சாலைப் பணிகள் இன்னும் 15 நாட்களில் முடிக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 18.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி தெரிவித்து, இந்நேர்வு தொடர்பான

புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், காவேரிப்பாக்கம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. J.முஹம்மத் அலி சித்திக் என்பவர் தனது 07.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட அமீர் தெருவினை பேரூராட்சிக்கு 14.2.2005 அன்று தானமாக அளிக்கப்பட்ட நிலையில், சுமார் 18 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாள்வரை தெருவிற்கு பேரூராட்சியால் சாலை அமைக்கப்படாததால் பொதுமக்களும் மற்றும் போக்குவரத்து வாகனங்களும் அச்சத்துடன் சென்று வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து சாலையை அமைக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

அரசாணை(நிலை) எண். 159, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 08.11.2022ல், அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் (Atal Mission for Rejuvenation and Urban Transformation 2.0 (AMRUT 2.0) பிறவற்றுள் காவேரிப்பாக்கம் பேரூராட்சி முழுவதற்கும் ரூ. 16.38 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள அரசால் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பேரூராட்சி பகுதி முழுவதும் குடிநீர் திட்ட பிரதான பைப்லைன் மற்றும் குடிநீர் விநியோக பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் நடைபெற்று தற்போது முடிவு பெற்றுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2022-23ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பிறவற்றுள் காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் மற்றும் அமீர் தெருவில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் மற்றும் கல்வெட்டுடன் கூடிய பேவர் பிளாக் சாலை (Providing Paver Block with Drain and Culvert) அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து அதற்கான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேரூராட்சிகளின் இயக்குநரின் அறிவுரைப்படி, பேரூராட்சிகளில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட பைப்லைன் பணி முடிவுற்றவுடன் கலைஞர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதிதாக சாலைப்பணி அமைக்கும் பணியினை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில், மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள அமீர் தெருவில் தற்போது அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. எனவே அமீர் தெருவில் மழைநீர் வடிகால்வாய் பணியுடன் பேவர் பிளாக் சாலைப்பணிகள் இன்னும் 15 நாட்களுக்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மனுதாரர் புகாராக தெரிவிக்கும் அமீர் தெருவில் புதிதாக சாலைப் பணிகளை 30 நாட்களுக்குள் முடிக்கப்பட்டு, அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, நவம்பர் 16ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. J.முஹம்மத் அலி சித்திக்,
எண்.50, அமீர் தெரு, கொண்டாபுரம்,
காவேரிப்பாக்கம், நெமிலி வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்

2) செயல் அலுவலர்,
காவேரிப்பாக்கம் தேர்வுநிலை பேரூராட்சி ,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032